## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- சபையின் ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- சபை தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ரூபா 208,479 ஆன அட்டுறுப் பணிக்கொடைக் கொடுப்பனவு பணிக் கொடைச் செலவின் கீழ் காட்டப்பட்ட காரணத்தினால் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான காசுப்பாய்ச்சல் அந்த அளவினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையுடன் முதலீட்டுத் தொகைப் பாய்ச்சல் ரூபா 694,657 ஆல் குறைத்துக் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | இந்த தவறு எதிர்வரும் காலங்களில் ஏற்படாத வகையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 5 இருப்பு விடயங்களின் பெறுமதி ரூபா 4,581,263 என்பதுடன் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 9,953,188 ஆக இருந்தமையால் இம்மதிப்பீடுகள் இடையே ரூபா 5,371,925 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கட்டிடப் புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக இருப்புக் கணிப்பீட்டுத் தவறுகள், இரட்டைக் கணிப்புத் தவறுகள் மற்றும் கூட்டல் தவறுகள் இந்நிலைமை ஏற்படுவதற்கான காரணங்களாக எதிர்பார்க்கப்படுவதுடன் மற்றும் எதிர்வரும் வருடங்களில் சரியான இருப்பு உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள இருப்புப் பெறுமதி பௌதீக உறுதிப்படுத்தல்கள் மூலம் உறுதிப்படுத்தப் பட வேண்டியதுடன் மற்றும் வேறுபாடுகள் இணக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) விற்பனையின் பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட புத்தகங்களுக்காக 2018 மே 15 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாத தொகை இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணனி மென்பொருளில் ஏற்பட்ட தவறு காரணமாக ஆசிரியர்களுக்குச் செலுத்த வேண்டிய மிகுதி பெறப்படாமை மற்றும் நிதி அறிக்கைகள் கால தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டியமை போன்றவற்றால் இந்நிலைமை ஏற்பட்டதுடன் மற்றும் எதிர்காலங்களில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. | பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட வேண்டியமை. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2012 மே 22 ஆந் திகதிய பொது நிறுவனங்கள் தொடர்பான குழுவின் தீர்மானம் | சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2010 ஆம் ஆண்டில் சட்டரீதியாக அன்றி சம்பளமாக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 247,500 ஆனது மீண்டும் அறவிடப்பட்டு அரச நிறுவனங்களின் குழுவிற்கு அறிக்கையிடுமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த ருக்கு கட்டளையிடப்பட்டிருந்தும் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையில் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | குழுவின் கட்டளையின் பிரகாரம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட துடன் மேலும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் மேலதிக ஆலோசனைகள் பெறப்பட்டமையுடன் அத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபையினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அவை அனைத்தும் தோல்வி அடைந்தவுடன் இறுதியில் தடைச் சட்டத்தின் கீழ் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | தடைச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட முன்னர் குறித்த தொகையை அறவிடுவதற்கு பொது நிறுவனங்கள் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 756 ஆவது நிதிப் பிரமாணம் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 108,537,706 பெறுமதியின் சர்வதேசப் புத்தக இருப்புக்கள் மற்றும் தேசிய நூலகத்தின் காப்பகங்களின் புத்தக இருப்புக்கள் மீளாய்வாண்டின் போது கணக்கெடுக்கப்படவில்லை . | கட்டிடத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் முழுப் புத்தகங்களும் சேகரிக்கப்பட்டு மறுசீரமைக்கப் படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அந் நடவடிக்கை முடிவடைந்த பின்னர் தேசிய நூலகத்தின் புத்தகங்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய பொதிலும் 2018 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி என்பதுடன் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சபையின் தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருகின்ற கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டமைக்கான தாமதமானது முன்னைய நிதியாண்டிற்கான கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னர் திருத்தங்களைச் செய்வதில் கூடுதலான தாமதங்கள் ஏற்பட்டமையால் நிதிக் கூற்றுக்கள் கால தாமதமானவை மற்றும் புதிய கணக்கீட்டு மென்பொருள் முறைமையில் ஏற்பட்ட மாற்றங்களும் இதற்குப் பங்களித்த விடயங்களாகும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,513,944 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 7,801,955 ஆகும். இதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,711,989 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு நிர்வாகச் செலவுகள் ரூபா 13,811,785 ஆல் உயர்வடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் வாகன விற்பனையினால் பெறப்பட்ட ரூா 2,710,862 தொகை ஒன்றினைக்கப்பட்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டாது செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் சபையினால் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்ட வாகனங்களின் மாதாந்த வாடகைக் கொடுப்பனவிற்காக தக்க வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,534,880 ஆனது மீளாய்வாண்டிற்குள் செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட | வாகன விற்பனையால் பெறப்பட்ட மூலதன இலாபம் செயற்பாட்டுக் குத்தகைத் தவணைப் பணம் செலுத்துவதற்காக ரூபா 1,534,880 நானாவித மூலதனச் சொத்துக்கள் கொள்வனவிற்காக ரூபா 1,175,982 உம் செலவிடப்பட்டமை மற்றும் திறைசேரியினால் மூலதன ஏற்பாடுகள் வழங்கப்படும் போது அப்பெறுமதி குறைக்கப்பட்டு மீள நிரப்பப்படும். | வாகன விற்பனையால் பெறப்பட்ட பணம் ஒன்றிணைக்கப் பட்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியமை மற்றும் மூலதன இலாபத்தில் மீண்டெழும் செலவினங் களைச் செய்யாது இருக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இரு வாகனங்களின் மாதாந்த தவணைப் பணம் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபையினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் அச்சிடப்பட்ட ரூபா 2,357,948 பெறுமதியான 9,145 சபையில் வெளியீடுகள் கணக்காய்வுத் தினமாகிய 2020 பெப்ரவரி 12 ஆந் திகதி வரையில் களங்சியசாலையில் மற்றும் தகவல் கட்டுப்பாட்டுப் பிரிவில் சேமிக்கப்பட்டிருந்தன. | சபையின் களஞ்சியசாலையில் சேமிக்கப்பட்டிருந்த தகவல் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு உரித்தான வெளியீடுகள் இவ்வருடத்தில் சபையினால் வெளியாருக்கு மற்றும் உள்ளக ரீதியில் ஏற்பாடு செய்யப்படுகின்ற நானாவித செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளின் போது பங்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் வெளியீடுகள் விற்பனை செய்தல் மற்றும் பங்கிடுதல் தொடர்பாக நிலையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | இலங்கை தேசிய நூலகம் உள்ளிட்ட முக்கிய பொது நூலகங்களில் 26 டிஜிட்டல் நூலகங்களை இரு வருடங்களில் ஆரம்பிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டு முதலாவது கட்டத்தின் கீழ் 8 நூலகங்களின் பணி நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாகத் திட்டமிடப்பட்டிருந்தும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படவில்லை. மேலும் 2018 ஆம் வருடத்திற்காகத் திட்டமிடப்பட்ட தேசிய ஒன்றிணைக்கப்பட்ட குறியீட்டு தரவுத்தள புதுப்பிப்பு மற்றும் ‘‘பட்டப்பின் படிப்பு ஆய்வறிக்கைத் தொடர்’’2011 - 2016 இற்குரிய கிரந்தங்கள் தொகுக்கப்படுதலானது மேற்கொள்ளப்படவில்லை. | பொறுப்புக்கள் தொடர்பான சில உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கு தரப்பினரிடையே ஓரளவு காலம் எடுக்கப்பட்டமையால் உடன்படிக்கைக் கைச்சாத்திடுவதற்குக் காலதாமதம் ஏற்பட்டமையால் இற்றை வரையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டு முதலாம் கட்டத்திற்கான நூலகங்களின் பணி நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிட்டதன் பிரகாரம் செயற்திட்டக் காலத்திற்குள் அதற்கான பணி நடவடிக்கைகள் முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படும். | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | தேசிய நூலகத்தில் சேகரிப்புகாக கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களில் அடங்காத விடயத் துறைகள் இனங்காணப்பட்டு அப்புத்தகங்கள் பெறப்படுவதற்கு, பனை | இலங்கை தேசிய நூலகத்தின் சேகரிப்பை முறையான தொகுப்பாக மாற்றுவதிற்குப் பல்வேறு முறைகள் மூலம் வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்குப் | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஓலைப் புத்தகங்களின் சேகரிப்பை ஊக்குவிப்பதற்காக பனை ஓலைப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு, தீவில் உள்ள நூலகங்களில் தற்போதைய நிலைமை தொடர்பான கணிப்பீடு நடாத்துவதற்கு, நூலகங்களில் KOHA மென்பொருட்களைப் பயன்படுத்தி தானியக்கமாக்கு வதற்கும் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்தும் ஆனால் அவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | பழைய சேகரிப்புக்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் இயலுமை காணப்பட்டது. புத்தக நன்கொடைகளுக்கான கோரிக்கை பெறப்பட்டுள்ளதுடன் கட்டிடத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடையும் வரை கொள்வனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது. நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறையில் புதிய போக்குகளை உள்ளடக்கும் வகையில் 2018 ஆம் ஆண்டில் வெளியீடுகளை வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட வருடத்திற்குள் மேற்கொள்ளப்படாமையினால் 2018 சனவரி 01 ஆந் திகதியில் செலவிடப்படாத சேமிக்கப்பட்டிருந்த மிகுதியினுள் ரூபா 37,592,602 ஆன மூலதன மானியங்களில் ரூபா 2,881,696 ஆனது 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பயன்படுத்தப்படாது தக்க வைக்கப்பட்டிருந்தது. | பெறுகைச் செயற்பாடுகள் வருடத்திற்குள் முடிக்கப்படுவதற்காக தக்க வைக்கப்பட்டமை வரித் தொகை சபையினுள் தக்க வைக்கப்பட்டிருந்தது. எனினும் நடைமுறையிலுள்ள எல்லைகள் மற்றும் சிக்கலான நிலைமையின் அடிப்படையில் வருடத்திற்குள் முடிக்கப்படாத செயற்பாடுகளுக்கான கொடுப்பனவிற்காக நிதி தக்க வைக்கப்படுவதால் மேற்கூறிய மிகுதிகள் காட்டப்பட்டிருந்தமை. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் கட்டிடத் தொகுதிப் புனரமைத்தல் நடவடிக்கைகள் முடிக்கப்பட்டமையுடன் ஆனால் கட்டிடத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்பட்டன. | சபையின் கட்டிடத்தில் நிர்மாணப் பணிகள் மேற்பார்வை செய்யப்படுதலானது கல்வி அமைச்சினால் ஆகும். கட்டிடத்தின் நிர்மாண பணிகள் முடிக்கப்படாமையினால் அரச கணக்காய்வு | அரச நிதியை வினைத்திற மையாகவும் மற்றும் பயனுள்ள தாகவும் பயன்படுத்த வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக சோதனைகளின் போது முடிக்கப்படாத 20 செயற்பாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் புனரமைப்பு நடவடிக்கைகளில் குறைபாடு காரணமாக சபையின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதில் தடைகள் காணப்பட்டன. | பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புடன் உடன்படுகின்றேன். கல்வி அமைச்சின் விசேட செயற்திட்டம் வாய்மொழியாக கூறப்பட்டதன் பின்னர் கட்டிட நிர்மாணப் பணி நடவடிக்கைகள் முடிக்கப்படுவதற்காக சுமார் ரூபா 110.5 மில்லியன் வரையான தொகை தேவைப்படுவதால் பணம் பெறுவதில் நெருக்கடி காணப்படுவதால் 2020 வருடத்தில் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதுடன் குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டவுடன் பணிகளை முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உத்தேசத் திட்டங்கள் தொடர்பாக முழுமையான திட்டம் தயாரிக்கப்படாது வருடத்திற்குள் கிடைக்கப் பெறுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட்டுச் செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடங்களில் தயாரிக்கப்பட வேண்டிய அனைத்து செயற்திட்டங்களுக்காகவும் முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்துவதற்கு உரிய பிரிவுகளின் பொறுப்பான உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டு திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தேசிய நூலக வளங்களின் அட்டவணைப்படுத்தல் மற்றும் தேசிய நூலக குறியீட்டினை கணினி மயமாக்கல், பட்டப்பின் படிப்பு ஆய்வறிக்கைத் தொடர் 2011 - 2016 புத்தகத்தின் தொகுப்பு தேசிய ஒன்றிணைக்கப்பட்ட குறியீட்டு தரவுத் தளத்தைப் புதுப்பித்தல், இடர் நிலைமைகளில் தேசிய சேகரிப்பை பாதுகாப்பதற்காக | 2019 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டு வரையான தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்திற்குள் பட்டப்பின்படிப்பு ஆய்வறிக்கைத் தொடர் 2011 - 2018 இன் தொகுக்கப்படும் நடவடிக்கை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்ற மானது முன்னேற்ற அறிக்கையின் |

| | | |
|---|---|---|
| தேசிய நூலக இடர் முகாமைத்துவத் திட்டம் தயாரிப்பதற்காக இரண்டு குழுக் கூட்டங்களை நடாத்துதல், பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தரங்களை உருவாக்குதல் சம்பந்தமாக ஆலோசனைக் குழுவை நியமித்தல், ஆவணங்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஆவணங்களை மறுசீரமைப்புச் செய்தல், பனை ஓலைப் புத்தகங்களின் சேகரிப்பை மேம்படுத்துதல், பனை ஓலைப் புத்தகங்களை பாதுகாப்பதற்கான பங்களிப்பிற்காக கம் எண்ணையை பிரித்தெடுக்கும் திட்டத்தை செயற்படுத்துதல், இலங்கை தொடர்பான வெளிநாட்டு வெளியீடுகளைப் பெறுதல், போன்ற துணைச் செயற்பாடுகளின் முன்னேற்றமானது முன்னேற்ற அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படவில்லை. | | மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருடத்திற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஆனால் அதன் செயற்பாடுகளுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள், இலக்குகள் மற்றும் அவ்விலக்குகளை அடைவதற்கான மைல் கற்களையும் இலக்குகளின் சாதனைகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்த க.செ/பொது/2018/19 ஆம் இலக்க மற்றும் 2018.02.18 ஆந் திகதிய கடிதம் அறிந்து கொள்வதற்காக மற்றும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிறுவனத்தின் அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நிறைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் (KPI) உள்ளடக்கப்பட வேண்டியமை. |